போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

JULY 24, 1923.

ந. 12 (7).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் வருஷம் ஜூலைமீ 24உ. [விலை, 3 பை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டுகள்

ACTS OF THE GOVERNMENT OF INDIA

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்ட்.

சட்டநிரூபண இலாகா.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஏப்ரல்மீ 2உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகிறது :—

ACT No. XXIII OF 1923.

1923-ம் வருஷத்து 23-வது ஆக்ட்.

AN ACT FOR THE REMOVAL OF DOUBTS REGARDING THE RIGHT OF WOMEN TO BE ENROLLED AND TO PRACTISE AS LEGAL PRACTITIONERS.

நியாயவாதிகளாக தாக்கல் செய்து கொள்ளப்படுவதற்கும் நியாயவாதம் செய்வதற்கும் ஸ்திரீகளுக்குள்ள உரிமை விஷயமாய் ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்திப்பதற்கான ஆக்ட்.

நியாயவாதிகளாக தாக்கல் செய்து கொள்ளப்படுவதற்கும் நியாயவாதம் செய்வதற்கும் ஸ்திரீகளுக்குள்ள உரிமை விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சில சந்தேகங்களை நிவர்த்திப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, (ஸ்திரீ) நியாயவாதிகளைக் குறித்த 1923-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது-ப்ரிடிஷ் பலுசிஸ்தானம், ஸந்தால் பர்காணுக்கள் ஆகிய இவைகள் அடங்க ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

1879-ம் வருஷத்து 18-வது ஆக்ட். அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, "நியாயவாதி" என்பது - 1879-ம் வருஷத்திய நியாயவாதிகளாக்ட் 3-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள நியாயவாதியென்று அர்த்தமாகும்.

பெண்பாலராயிருப்பது காரணமாகவே ஸ்திரீகள் தகுதி யற்றவர்களாகமாட்டார்களென்பது.

3. ப்ரிடிஷ் இந்தியாவில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்திலாவது, யாதொரு ஹைகோர்ட்டாரின் லெட்டர்ஸ் பேடென்ட் என்னும் அதிகார பத்திரத்திலாவது, அப்படிப்பட்ட யாதொரு சட்டதிட்டம் அல்லது அதிகார பத்திரத்தின்படியாகிலும் அதை அனுசரித்தாகிலும் செய்யபபட்ட யாதொரு விதி அல்லது உத்தரவிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு ஸ்திரீயானவள் பெண்பாலென்னும் காரணமாகவே, நியாயவாதியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கோ தாக்கல் செய்துகொள்ளப்படுவதற்கோ அல்லது நியாயவாதம் செய்வதற்கோ தகுதியற்றவளாகமாட்டாள்; மேலும், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாயுள்ள அப்படிப்பட்ட யாதொரு விதி அல்லது உத்தரவானது - அந்தப்படி விரோதமாயிருக்கிறமட்டில் ரத்தாய்விடும்.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்டின் 67 B பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி கவர்னர் ஜெனரலவர்களால் செய்யப்பட்டு ஆலோசனை சபையிலுள்ள மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் உத்தரவு மூலமாய்த் தெரிவித்து மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் அனுமதி பெற்றிருக்கும் அடியிற்கண்ட ஆக்டானது - இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

AN ACT TO PREVENT THE DISSEMINATION BY MEANS OF BOOKS, NEWSPAPERS AND OTHER DOCUMENTS OF MATTER CALCULATED TO BRING INTO HATRED OR CONTEMPT, OR TO EXCITE DISAFFECTION AGAINST PRINCES OR CHIEFS OF STATES IN INDIA OR THE GOVERNMENTS OR ADMINISTRATIONS ESTABLISHED IN SUCH STATES.

இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களின் மன்னர்கள் அல்லது அதிபதிகளிடத்திலாவது அப்படிப்பட்ட சமஸ்தானங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டார் அல்லது பரிபாலகர்களிடத்திலாவது வெறுப்பு அல்லது உதாசினத்தை உண்டாக்கக்கூடிய அல்லது பிரீதியின்மையை விளைவிக்கக்கூடிய விஷயத்தை, புஸ்தகங்கள் மூலமாகவும் சாமாசாரபத்திரிகைகள் மூலமாகவும் இதர தஸ்தவேஜுகள் மூலமாகவும் பரவச்செய்வதைத் தடுப்பதற்கான ஆக்ட்.

இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களின் மன்னர்கள் அல்லது அதிபதிகளிடத்திலாவது அப்படிப்பட்ட சமஸ்தானங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டார் அல்லது பரிபாலகர்களிடத்திலாவது வெறுப்பு அல்லது உதாசினத்தை உண்டாக்கக்கூடிய அல்லது பிரீதியின்மையை விளைவிக்கக்கூடிய விஷயத்தை, புஸ்தகங்கள் மூலமாகவும் சமாசாரபத்திரிகைகள் மூலமாகவும் இதர தஸ்தவேஜுகள் மூலமாகவும் பரவச்செய்வதைத் தடுப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, இந்திய சமஸ்தானங்களை (பிரீதியின்மை ஏற்படுவதனின்றும் பாதுகாப்பதை)க் குறித்த 1922-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் பலுசிஸ்தானம், ஸொந்தால் பர்காணுக்கள் ஆகிய இவைகளடங்க ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

1867-ம் வருஷத்து 25-வது ஆக்ட்.

(a) "புஸ்தகம்", "சமாசாரபத்திரிகை" என்பவை - அச்சுக்கூடத்தையும் புஸ்தகங்களை ரெஜிஸ்டர் செய்வதையுங்குறித்த 1867-ம் வருஷத்து ஆக்டில் முறையே அவைகளுக்கு என்ன அர்த்தம் சொல்லியிருக்கிறதோ அதே அர்த்தம் உடையவைகளாகும் ;

(b) "பிரீதியின்மை" என்பதில், ராஜபக்தியின்மையும் விரோதமான சகல எண்ணங்களும் அடங்கும் ; மேலும்,

(c) "தஸ்தவேஜு" என்பதில் யாதொரு (பெய்ன்டிங்) வர்ணப்படம், வரிவடிவம், போடொக்ராப் என்னும் சாயாபடம் அல்லது கண்ணுக்குத் தெரியும்படியான வேறே பிரதிரூபம் என்பதும் அடங்கும்.

தண்டனை.

3. (1) இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தின் யாதொரு மன்னர் அல்லது அதிபதியினிடத்திலாவது அப்படிப்பட்ட யாதொரு சமஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டார் அல்லது பரிபாலகர்களிடத்திலாவது வெறுப்பு அல்லது உதாசினத்தை உண்டாக்குகிற அல்லது உண்டாக்க உத்தேசிக்கப்பட்டதாயிருக்கிற அல்லது பிரீதியின்மை விளைவிக்கிற அல்லது விளைவிக்க உத்தேசிக்கப்பட்டதாயிருக்கிற யாதொரு புஸ்தகம், சமாசாரபத்திரிகை அல்லது வேறே தஸ்தவேஜை எவராகிலும் பதிப்பித்தாலும் அச்சிட்டாலும் பிரசுரித்தாலும் அப்படிப்பட்ட புஸ்தகம் முதலியவைகளின் ஆசிரியராயிருந்தாலும், அவர் - ஐந்து வருஷத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனையாகிலும் அபராத தண்டனையாகிலும் இவ்விரண்டு தண்டனைகளுமாகிலும் விதிக்கப்படத்தக்கவராவார்.

(2) யாதொரு புஸ்தகம், சமாசாரபத்திரிகை அல்லது வேறே தஸ்தவேஜானது வெறுப்பு, உதாசினம் அல்லது பிரீதியின்மை விளைவிக்காமலாவது விளைவிக்க உத்தேசிக்கப்பட்டதாயிராமலாவதிருந்து, அதில் மேலேகண்ட யாதொரு மன்னர், அதிபதி, கவர்ன்மெண்டார் அல்லது பரிபாலகர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளை நியாயமான முகாந்தரத்தினால் மாற்றிக்கொள்ளவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு அவைகளைக் குறித்து அசம்மதத்தையாகிலும் அப்படிப்பட்ட யாதொரு மன்னர், அதிபதி, கவர்ன்மெண்டார் அல்லது பரிபாலகர்களின் பரிபாலன செய்கையைக் குறித்தோ வேறே செய்கையைக் குறித்தோ அசம்மதத்தையாகிலும் தெரிவிக்கும் வியாக்கியானங்கள் அடங்கியிருந்தால், அந்தப் புஸ்தகம், சமாசாரபத்திரிகை அல்லது வேறே தஸ்தவேஜின் விஷயமாய் எந்த நபரும் - இந்தப் பிரிவின்படிக்கான குற்றம் செய்வதாகக் கருதப்படமாட்டார்.

4. 1898-௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின் 99 A முதல் 99 G வரையிலுள்ள பிரிவுகளிலும் 1898-௵த்து இந்தியன் போஸ்டாபிஸென்னும் தபால் இலாகா ஆக்டின் 27 B முதல் 27 D வரையிலுள்ள பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகள் - அந்தப் பிரிவுகளின் தாற்பரியப்படி ராஜதுரோக சம்பந்தமான விஷயம் அடங்கியுள்ள யாதொரு புஸ்தகம், சமாசாரபத்திரிகை அல்லது தஸ்தவேஜின் விஷயத்தில் எம்மாதிரி பிரயோகப்படுமோ அம்மாதிரியாகவே, எந்த விஷயத்தின் சம்பந்தமாய் 3-வது பிரிவின்படி யாதொரு நபர் தண்டனை விதிக்கப்படத்தக்கவராயிருக்கிறாரோ அந்த விஷயம் அடங்கிய யாதொரு புஸ்தகம், சமாசாரபத்திரிகை அல்லது வேறே தஸ்தவேஜின் விஷயத்திலும் பிரயோகப்படும்.

சில பிரசுரங்களைப் பறிமுதல் செய்யவோ தபால் மூலமாய் அனுப்பப்பட்டு வரும்போது அவைகளை மறியல் செய்யவோ அதிகாரம்.

1898-௵த்து 5-வது ஆக்ட். 1898-௵த்து 6-வது ஆக்ட்.

5. யாதொரு ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் அல்லது யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட எந்தக் கோர்ட்டாரும் - 3-வது பிரிவின்படிக்கான யாதொரு குற்றத்தைப் பரிசீலனை செய்யத் தொடங்கக்கூடாது; மேலும், எந்தக் கோர்ட்டாரும் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலாவது அவர்களுடைய உத்தரவின்படியாவது பிரியாது செய்யப்பட்டாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட யாதொரு குற்றத்தைப் பரிசீலனை செய்யத் தொடங்கக்கூடாது.

இன்ன கோர்ட்டுகளாலும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் குற்றங்கள் பரிசீலனை செய்யப்படலாமென்பது.

எல். க்ராஹாம்,
இந்தியா கவர்ன்மெண்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.